නිවාස හා සමෘද්ධි අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு
Ministry of Housing & Samurdhi

4 මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
4 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல
4 floor, Sethsiripaya, Battaramulla

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Divineguma Development**

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/07/SD/05/

ඔබේ අංකය / உமது இல / Your No: ……

දිනය / திகதி / Date: 2015.05.06

சகல மாவட்ட மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்/ மாவட்டச் செயலாளர்கள்

சகல வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்கள்

சகல பிரதேச செயலாளர்கள்

## சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2015

வறுமையினைக் குறைத்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு செயற்படுகின்ற வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் சேர்ந்து 2015ம் ஆண்டில் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது வரை சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் செயற்பட்ட சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை மேலும் விரிவாக்கி நல்லொழுக்கமுள்ள சிறந்த சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களை விளக்கமளித்து அதன் பொருட்டு அவர்களை நெறிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

அடிப்படைக் குறிக்கோள்கள்:

- ❖ ஆத்மீக மற்றும் நல்லொழுக்கமிக்க சுபீட்சமிகு சமூகம் ஒன்றினை உருவாக்குதல்.
- ❖ போதை மற்றும் புகைத்தலற்ற செழிப்பான கிராமம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல்.
- ❖ சமூகத்தில் வசதி வாய்ப்புக்களற்ற நிலைக்குள்ளான பிரிவினருக்கு சமூகரீதியான பெறுமதியினை உருவாக்குதல்.
- ❖ குறைந்த வருமானம் பெறுவோரினதும் அக்குடும்பங்களின் குடும்பத்தவரது பிள்ளைகளினது சமூக மற்றும் கலாச்சார பெறுமதிகளை அதிகரித்தல்.
- ❖ மகளிர் வலுவூட்டல் மற்றும் தலைமைத்துவ ஆற்றல் விருத்தியின் ஊடாக குடும்பத்தின் வாழ்வாதார சூழலையும் அதன் பெறுமானத்தினையும் உயர்த்துதல்.

மேலுள்ள குறிக்கோள்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பிரதேச, மாவட்ட, தேசிய மட்டத்தில் கீழுள்ள செயற்பாடுகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. ஆத்மீக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
2. குடும்பத்திற்குள் மகிழ்ச்சியினையும் பாசத்தினையும் மேம்படுத்தல்.
3. போதை மற்றும் புகைத்தல் தடுப்பு வேலைத்திட்டங்கள்.
4. சிறுவர் பாதுகாப்பு மற்றும் நலன்புரியின் பொருட்டு செயற்படும் வேலைத்திட்டங்கள்.
5. மகளிர் பங்கேற்பு மற்றும் தலைமைத்துவத்தினை மீண்டும் சமூக மயப்படுத்தல்.
6. சிசு திரிய புலமைப்பரிசில் வேலைத்திட்டம்.


| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி / Additional Director General | අධ්‍යක්ෂ (පාලන) / பணிப்பாளர் (நிர்வாகம்) / Director (Administration) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|
| දුරකථන/ தொலைபேசி/Telephone: | 011-2872202 | 011-2861994 | 011-2873799 | 011-2889046 |
| ෆැක්ස්/ தொலைமடல்/Fax: | 011-2889002 | | 011-2873996 | |
| ඊ-මේල්/ மின்னஞ்சல்/ E-Mail: | dgdivineguma@gmail.com | anuradhakum@yahoo.com | hrddivineguma@gmail.com | |

7. சர்வதேச ஞாபகார்த்த தின நிகழ்ச்சித் திட்டங்கள்.
8. மாதிரிக் கிராம வேலைத்திட்டங்கள்.
9. வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.
10. முன்னேற்ற மீளாய்வு வேலைத்திட்டங்கள்.

**1) ஆத்மீக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்**

மக்களிடத்தே ஆத்மீக நற்குணங்களை மேம்படுத்தும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் ஆத்மீக அபிவிருத்தி வேலைதிட்டங்கள் செயற்படுத்தப்படும்.

I. சமயத் தலங்களை மேம்படுத்துதல்.

II. சமயத் தலங்களின்பால் மக்களை ஒன்று திரட்டச் செய்வதும் நற்பண்புகளைக் கட்டியெழுப்புவதும்.

III. பொதுச் சொத்துக்களை சரியாகப் பயன்படுத்துவதும் எமது சொத்துக்களை பாதுகாப்பதற்கு வழிகாட்டுதலும்.

IV. விசேட சமய தினங்களைக் கொண்டாடுவதும் விசேட வேலைத்திட்டங்களும்.

V. சிறுவர்களுக்கான பொது நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்.

**2) குடும்ப அலகிற்குள் மகிழ்ச்சி, பாசத்தினை மேம்படுத்தல். (மகிழ்ச்சியான குடும்பம்)**

சமூகமானது மிக செழிப்பாக அமைவது குடும்ப அலகிற்குள் உருவாகும் அன்பு, கருணை, பாசம் போன்ற ஆற்றல்களை ஆட்களிடத்தே பலப்படுத்துவதன் ஊடாகவேயாகும். அதன் பொருட்டு கீழுள்ள தலைப்புக்களுக்கு கவனத்தைச் செலுத்தி விழிப்பூட்டல், அனுபவப் பரிமாற்றம் போன்ற பல்வேறு விசேட செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

I. சிறந்த வீட்டு முகாமைத்துவம் மற்றும் சிக்கனத்தின் பெறுமதி.

II. குடும்பத்தின் அங்கத்தவர்களிடத்தே அந்நியோன்ய கட்டுப்பாடுகளின் பெறுமதிகள் மதிப்பீடுகள் மற்றும் வீட்டு வன்முறைகளைக் குறைத்தல்.

III. குடும்பத்திற்குள் இரசனை விருந்து செயற்பாடுகளை அங்கத்தவர்களிடையே அந்நியோன்ய தொடர்பாடல்கள், சரியான தீர்மானங்களை மேற்கொள்வதற்குரிய ஆற்றல்களை மேம்படுத்தல்.

IV. ஆண், பெண் சமூக நிலை தொடர்பான விளக்கம்.

V. சகல அங்கத்தவர்களின் பாதுகாப்பு, போசனைகள், சுதந்திரம் என்பவற்றை குடும்பங்களில் உறுதிப்படுத்துவதற்கு வயது வந்தோர்களை ஊக்குவித்தல்.

**3) போதை மற்றும் புகைத்தல் பொருட்களின் தடுப்பு வேலைத்திட்டங்கள்.**

போதை மற்றும் புகைத்தலுக்கு இழுக்கப்படுகின்ற தேசிய சொத்துக்களானது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தவும் இளைஞர்கள் மற்றும் சிறுவர் பராயத்தினரை புகைத்தல் மற்றும் போதையிலிருந்து மீட்பதும் காலத்தின் தேவையாகும். அதன் பொருட்டு கீழுள்ள செயற்பாடுகள் செயற்படுத்தப்படும்.

I. புகைத்தல், மதுசாரம் மற்றும் போதைப் பொருட்களின் பரவலாக்கம் மற்றும் பயன்பாடுகள் தொடர்பில் தேசிய, பிரதேச, மாவட்ட மட்டத்தில் (தற்போதுள்ள நிலையில்) தகவல்களைச் சேகரித்து தரவுத் தொகுதியினை முறைமைப்படுத்தல்.

II. மக்களிடமுள்ள போதைப்பொருள், புகைத்தல் பொருட்கள் தொடர்பான மூட நம்பிக்கைகளை அகற்றி அவை தொடர்பான சரியான விளக்கத்தினை வழங்குதல்.

III. போதை மற்றும் புகைத்தலுக்கு அடிமையான இனங்காணப்பட்ட குழுக்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து கிராம சேவகர் பிரிவு, பிரதேச, மாவட்ட மட்டத்தில் விழிப்பூட்டல்களை மேற்கொள்ளல்.

IV. சிறுவர் மற்றும் இளைஞர் குழுக்களை பயனுள்ள போதைப் பொருள் தடுப்பு செயற்பாடுகளின் பொருட்டு ஈடுபடச் செய்வதும் அவர்களது தலைமையில் அமைப்புக்களையும் குழுக்களையும் கட்டியெழுப்புதல்.

V. மதுசாரம் மற்றும் போதைப் பொருட்களைப் பாவிப்போரின் முறையற்ற நடத்தைகளின் போலித் தன்மையினை இனங்காண்பதும் அதற்கு எதிராக மக்களை பலப்படுத்துவதும்.

VI. சிறுவர்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் பிரச்சாரங்கள் மற்றும் ஏனைய தூண்டுதல்களுக்கு எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதற்கு மக்களை விழிப்பூட்டுதல்.

VII. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு வழிகாட்டல்களை வழங்குவதும் தடுப்பு நிலையங்களின் பால் அவர்களை தொடர்புபடுத்துதலும்.

VIII. போதைப் பொருட்கள், புகைத்தல் பொருட்களை விற்பனை செய்யாத கடை உரிமையாளர்களை சமூகத்தில் பாராட்டுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

IX. 2006ம் ஆண்டின் 27ம் இலக்க புகையிலை, மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபைச் சட்டம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதன் ஊடாக அதன் நன்மைகளை மக்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுதல்.

X. சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி தின வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல். (குறித்த சுற்றறிக்கைக்கமைய)

**4) சிறுவர் அபிவிருத்தி மற்றும் நலன்புரிகள்.**

கிராமிய ரீதியாகவும் நகர ரீதியாகவும் பரந்து கிடக்கின்ற சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து சிறுவர் அபிவிருத்தி மற்றும் நலன்புரியின் பொருட்டு முறையான வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதே அடிப்படை எதிர்பார்ப்பாகும்.

I. தற்போது உருவாக்கப்பட்டுள்ள சிறுவர் கழகங்களை செயற்படக்கூடிய நிலைக்கு உருவாக்குவதும் அச்சிறுவர் கழகங்களை செயற்படுபவையாக நடமுறைப்படுத்தும் பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்களை பிரதேச மட்டத்தில் அறிமுகப்படுத்துதல்.

II. ஒவ்வொரு கிராமத்திற்கும்/ பிரிவு மட்டத்திலும் சிறுவர் கழக சிறார்களின் பொருட்டு அழகியற்கலை நிகழ்ச்சிகள், கலாச்சார போட்டிகளை நடாத்துதல்.

III. சிறு பராயத்திலிருந்தே பொது வாழ்க்கை, மற்றும் சேமிப்புக்கள் அத்துடன் சிக்கனம் என்பவற்றின் பொருட்டு பிள்ளைகளை பழக்கப்படுத்துதல்.

IV. ஒவ்வொரு சிறுவரினதும் இழந்த சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

V. சிறுவர் கழகம் ஒன்றிற்கான நூலகம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதும் அதனூடாக அவர்களை வாசிப்பதற்கு பழக்கப்படுத்துவதும்.

VI. சிறுவர் கழகங்களை நடாத்திச் செல்லும் பொருட்டு பல்வேறு படைப்பாக்க வேலைத் திட்டங்களை உருவாக்குதல்.

VII. குடும்பத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் சுற்றுச் சூழலிலிலும் சிறார்களுக்கான அன்பு, கருணை, பாசம் என்பவற்றினை விருத்தி செய்யும் பொருட்டு பொருத்தமான சூழலைக் கட்டியெழுப்புதல்.

VIII. வீட்டுக்குள்ளேயே புத்தகத்திலேயே அடிமையாகி உளரீதியாக கைதிகளாயுள்ள சிறார்களை அதிலிருந்து மீட்டுக் கொள்வதற்கு விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல்.

**5) மகளிர் பங்கேற்பு மற்றும் தலைமைத்துவத்தினை மீண்டும் சமூக மயப்படுத்தல்.**

சமூகத்தில் வசதி வாய்ப்புக்களற்ற நிலைக்குள்ளாகியுள்ள பெண்களை பொருளாதார, சமூக மற்றும் உளரீதியான நிலையினை விருத்தி செய்து அவர்களது குடும்பத்தில் சிறந்த சமூகப் பின்னணி ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.

ஊக்கமிக்க பெண்கள் உட்பட சமூகத்தின் தலைமைத்துவ ஆற்றலுள்ள பெண்களை சமூகமயப்படுத்தி அவர்களது பணியினை பிரயோசனமுள்ளதாக பயன்படுத்திக் கொள்வதும் ஒரு மேலதிக தேவைப்பாடாகும்.

அதன் பொருட்டு கீழுள்ள செயற்பாடுகளை நடப்பாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

I. கர்ப்பிணிப் பெண்களின் நலன்புரித் திட்டங்கள் (விளக்கமளித்தல், சிகிச்சை நிலையங்களை நடாத்துதல், போசனை வேலைத் திட்டங்கள், அன்பளிப்புக்கள்)

II. பாதிப்புக்குள்ளான பெண்களின் பொருட்டான உதவிகள். (விதவைகள், கணவன் விட்டுச்சென்ற, பெற்றோர் சகோதர உதவிகள் இல்லாத)

III. சிறைப்பிடிக்கப்பட்ட கணவனையுடைய மற்றும் சிறைப்பிடிக்கப்பட்டு மீண்டும் வருகை தந்துள்ள பெண்களை சமூக மயப்படுத்தல்.

IV. பெண்கள் தலைமைத்துவம் மற்றும் மகளிர் நலன்புரி வேலைத்திட்டங்கள்.

V. படைப்பாக்கமுள்ள சிறுவர் பரம்பரை ஒன்றினை உருவாக்குவதில் தாயொருவரின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விளக்கமளித்தல் மற்றும் அனுபவ பரிமாற்றம். (பிள்ளைகளின் உடல், உள போசனைகள், பாசம், அன்பு மற்றும் தாய்மார்கள் வெளிநாடு செல்வதால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பில் விளக்கமளித்தல்)

**6) சிசு திரிய புலமைப்பரிசில் வேலைத்திட்டம்.**

செப்டம்பர் 08 உலக எழுத்தறிவு தினத்தோடு இணைந்ததாக இவ் வேலைத் திட்டத்தினை நடாத்த வேண்டியதுடன் வருடாந்தம் நடத்தப்படுகின்ற சிசு திரிய புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தினை இவ்வாண்டு செயற்படுத்துவது பொருத்தமானதாகும். இங்கு ஆகக் குறைந்தது ரூ.500/= என்ற வீதத்திலாவது ஒரு புலமைப்பரிசிலையோ அல்லது தாபரிப்பு பெற்றோர் திட்டத்தின் கீழ் பிரிவு ஒன்றிலிருந்து தெரிவு செய்து கொள்வது பொருத்தமானதாகும். இதற்கு மேலதிகமாக சமூக அபிவிருத்தி மன்றத்தின் வருடாந்த திட்டமிடலில் உள்ளடக்கி முன்னரைப் போன்றே சிசு திரிய புலமைப்பரிசில்களை உயர்ந்த பட்சத்தில் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானதாகும்.

**7) சர்வதேச ஞாபகார்த்த தின வேலைத் திட்டங்கள்.**

சர்வதேச தினங்களோடு இணைந்ததாக (சர்வதேச மகளிர் தினம்/ உலக புகைத்தல் எதிர்ப்பு தினம்/ உலக சிறுவர் மற்றும் முதியோர் தினம்/ உலக போதைப்பொருள் தடுப்பு தினம்/ சர்வதேச எழுத்தறிவு தினம்/ வறுமை ஒழிப்பு தினம் போன்றவை) பிரதேச மற்றும் மாவட்ட

மட்டத்தில் வேலைத்திட்டங்களை திட்டமிட்டு நடாத்துதல் வேண்டும். அந்தந்த வேலைத்திட்டத்திற்குரிய வழிகாட்டல்கள் உரிய காலத்தில் வெளியிடப்படும்.

**8) மாதிரிக் கிராம வேலைத்திட்டம்.**

நாடு பூராகவும் அமைந்துள்ள கிராமங்களிலிருந்து மாவட்டத்திற்கு ஒரு கிராமம் என்ற வீதம் தெரிவு செய்து கொள்ள வேண்டியதுடன் அக்கிராமங்களை ஆத்மீக, நற்குணமுள்ள சிறந்த சுபீட்சமான கிராமங்களாக அபிவிருத்தி செய்வது இவ் வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு தெரிவு செய்து கொள்ளப்படும் கிராமமானது சகல பிரிவுகளிலும் ஒன்றிணைந்த அணுகுமுறை ஒன்றாக பொருளாதார மற்றும் சமூக ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கு கீழுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்படும்.

I. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அபிவிருத்தி செய்யக்கூடிய 01 கிராமத்தினை இனங்காணுதல்.

II. வளமுகத்திரட்டின் ஊடாக உருவாகியுள்ள பிரச்சனைகள் மற்றும் அபிவிருத்தி செய்ய வேண்டிய பிரிவுகளை இனங்காணுதல்.

III. அவற்றின் பொருட்டு திணைக்களத்தின் சகல பிரிவுகளினதும் நேரடிப் பங்களிப்பு மற்றும் மாவட்ட மட்டத்தில் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பங்கேற்புடன் மாதிரிக் கிராமம் ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

IV. இங்கு பிரிவுப் பொறுப்பு வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர், சமுதாய அடிப்படைச் சங்கம், கிராம உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர், சுகாதார உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், வலய முகாமையாளர் ஆகிய உத்தியோகத்தர்கள் உட்பட கிராமத்திற்காக செயற்படக்கூடிய சகல அரசாங்க உத்தியோகத்தர்களின் தலையீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் படைப்பாக்க ரீதியாக அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்க சுதந்திரமுண்டு.

**9) திரிய பியச வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்.**

இவ்வாண்டிலும் திரிய பியச வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில் எனது சம இலக்கமான DDD/HO/7/SD/3/DP மற்றும் 2015-02-27ம் திகதியிடப்பட்டதுமான சுற்றறிக்கை மூலம் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஏற்கெனவே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**10) முன்னேற்ற மீளாய்வுகள்.**

மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் குறிப்பிட்ட பிரகாரம் நிறைவேற்றப்படுகின்றதா என்பதனை அளவை செய்து பார்ப்பதற்கும் பிரச்சனைகளினது மீளாய்வின் ஊடாக புதிய திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கும் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும்.

I. பிரதேச மட்டம்:- சகல கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளடங்குகின்ற பிரகாரம் மாதத்திற்கு ஒரு தடவை.

II. மாவட்ட மட்டம்:- சகல பிரதேச செயலகப் பிரிவுகளும் உள்ளடங்குகின்றவாறு மாதாந்தம் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தினை நடாத்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக மூன்று மாதத்திற்கொருமுறை நடைபெறும் கூட்டத்தின் பொருட்டு மாத்திரம் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவுள்ளது. இதற்கான முன்னேற்ற படிவம் உரிய காலத்தில் உங்களுக்கு வழங்கப்படும்.

III. தேசிய மட்டம்:- சகல மாவட்டங்களும் உள்ளடங்குகின்ற பிரகாரம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை.

<u>பொறுப்புக்களும் பின்பணி தொடர் ஆய்வுகளும்.</u>

- ❖ இந்த வேலைத் திட்டத்தினை ஒழுங்கு செய்து பிரதேச மட்டத்தில் செயற்படுத்துவது முகாமைத்துவப் பணிப்பாளர்/ தலைமையக/ வலய மற்றும் சமூக அபிவிருத்தி விடயப் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

- ❖ மாவட்டப் பணிப்பாளர்களின் வழிகாட்டலின் பிரகாரம் விடயப் பொறுப்பு முகாமையாளர்களால் மாவட்டத்தின் நடவடிக்கைகளை பின்பணி தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- ❖ மாதாந்த வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினை அடுத்து வரும் மாதத்தின் 10ம் திகதிக்கு முன்பதாக மாவட்டச் செயலகத்திற்கு குறித்த படிவத்திற்கமைய வழங்கப்படல் வேண்டும்.

- ❖ மாவட்டச் செயலகத்தால் அம்முன்னேற்றத்தினை அடுத்து வரும் மாதத்தின் 25ம் திகதிக்கு முன்னர் தலைமையலுவலகத்தின் சமூக அபிவிருத்தி பிரிவுக்கு அறிக்கையிடல் வேண்டும். இம் முன்னேற்றத்தினை மின்னஞ்சல் ஊடாக (dddsocialho@gmail.com) தலைமைக் காரியாலயத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- ❖ மேற்படி பணிகளை நிறைவேற்றும் போது தேவையின் பிரகாரம் அந்தந்த வேலைத்திட்டங்களுக்கு சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதிப் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அதன் பொருட்டு வருடாந்த திட்டமிடலை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். மாவட்ட ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் ஒழுங்கு செய்யப்படுகின்ற அவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு தலைமைக்காரியாலயத்திற்கு கருத்திட்ட அறிக்கையினை அனுப்பியதன் பின்னர் அதற்கு ஏதேனும் நிதி ஒதுக்கீடுகள் தலைமையலுவலகதிலிருந்து வழங்க முடியும் என்பதனையும் மேலும் அறியத்தருகின்றேன்.

  இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

தம்மிக்க குணவர்த்தன
பதில் பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர் - வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. மேலதிக செயலாளர் (வாழ்வின் எழுச்சி) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு - த.கூ.க.பொருட்டு
3. சகல பிரிவுத் தலைவர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம். - அ.கொ.பொருட்டும் உ.ந.பொருட்டும்
4. தலைமையக முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்/ வலய முகாமையாளர்கள்/ சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் - அ.கொ.பொருட்டும் உ.ந.பொருட்டும்.